கார்ப்பரேஷனுக்கு அனுப்புகிறார்கள். நாம் அங்கிருந்து பெறுகிறோம். இரண்டு மூட்டைகள்தான் இந்தக் கலப்படம் உள்ளதாகத் தெரிகிறது. மற்ற மூட்டைகள் இப்படி இருக்கின்றனவா என்று பார்க்கப்பட்டன. வேறு கடைகளில் சோதனை செய்து பார்த்ததில், அம்மாதிரி இல்லை என்று தெரிந்தது. ஆகையால் அது எங்கிருந்து வந்ததோ அங்கேதான் இந்தக் கலப்படம் நடந்திருக்க வேண்டுமென்று தெரிகிறது.

### *Soil Conservation Workers*

* 306 Q.—THIRU M. AIYASWAMY : Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state—

(a) whether the Soil Conservation Workers who worked in the Parambikulam–Aliyar Project works will be retrenched after the completion of the above works;

(b) whether there is any proposal with the Government to provide alternative employment for them; and

(c) if so, the details thereof?

### மண்வளப் பாதுகாப்பு ஊழியர்கள்.

**திரு. எம். அய்யாசாமி** : மாண்புமிகு உணவு-வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டப்பகுதி வேலைகள் நிறைவடைவதின் விளைவாக அப்பகுதியில் பணியாற்றி வந்த மண்வளப் பாதுகாப்பு ஊழியர்கள் வேலை நீக்கம் செய்யப்படுவார்களா ?

(இ) இல்லை எனில், அவர்களுக்கு மாற்று வேலை கொடுப்பதற்கு அரசாங்கத்திடம் ஏதேனும் திட்டம் உள்ளதா ?

(உ) ஆமெனில், விவரங்கள் என்ன ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி** : (அ) இல்லை.

(இ) அண்டு (உ) பரம்பிக்குளம் ஆழியாறு திட்டத்தின் கீழ் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள மண்வளப்பாதுகாப்புப் பணியாளர்களின் பணி 1972-ம் வருடம் மார்ச் மாதம் 31-ம் தேதி வரையில் தேவைப்படுகிறது. எனவே, அவர்களுக்கு மாற்று வேலைவாய்ப்பளிப்பது பற்றிய வினாவுக்கு இப்போதைக்கு இடமில்லை.

### *Procurement of paddy*

*307 Q.—THIRU T. K. SUBBIAH : Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state the measure of paddy to be procured in each acre according to the Paddy Procurement Order?

### நெல் கொள்முதல்

**திரு. டி. கே. சுப்பையா** : மாண்புமிகு உணவு-வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

நெல் கொள்முதல் உத்தரவில் எத்தனை ஏக்கருக்கு எவ்வளவு நெல் கொள்முதல் செய்ய வேண்டும் என உத்தரவிடப்பட்டிருக்கிறது ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி** : மண்வளத்தையும் மாசூலையும் பொறுத்து கொள்முதல் மாவட்டத்துக்கு மாவட்டம் வேறுபடும். உள்ளூர் நிலையை அனுசரித்து இந்த விகிதங்களை நிர்ணயிக்கும் அதிகாரம் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்குத் தரப்பட்டுள்ளது. ஒரு ஏக்கருக்கும் அதற்கும் குறைவாகவுள்ள ஒவ்வொரு நில உடைமையாளர்களிடமிருந்தும் கொள்முதல் செய்யக்கூடாதென உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**திரு. டி. கே. சுப்பையா :** மாவட்டக் கலெக்டர்கள் இதுபற்றி முடிவு செய்தபின்பு அந்த முடிவை பகிரங்கமாக விவசாயிகளுக்கு பத்திரிகை வாயிலாக அறிவிக்க ஏற்பாடு செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** விளைச்சலுக்கு ஏற்ப முடி வெடுப்பார்கள். சாகுபடி கொஞ்சம் குறைவாக இருக்கிற நேரத்தில் கொள்முதலைக் கொஞ்சம் தளர்த்திக்கொடுப்பார்கள். கூடுதலாக விளையும்போது கூடுதலாகக் கேட்பார்கள். குறிப்பிட்ட அளவு என்று நோட்டீஸ் கொடுத்தால், மகசூல் குறையும்போது, அதிகமாகக் கேட்கிறார்கள் என்று குறை சொல்லும் நிலை வரும். அதனால், மாவட்ட கலெக்டர்கள் அவ்வப் போது நிலைமைக்கேற்ப கொள்முதல் ஏற்பாடு செய்வார்கள்.

**திரு. டி. கே. சுப்பையா :** உற்பத்தியாகிற அளவுக்கு ஒரு முடிவு எடுத்து விட்டால் நன்றாக இருக்கும். அடிக்கடி விவசாயிகளுக்கு வருகின்ற அறிவிப்புகள் மாறுகின்றன. அது தெரியவில்லை. எட்டு மூட்டை என்றுஅறிவித்திருந்தால் உடனே 12 மூட்டை என்று நோட்டீஸ் வருகிறது. ஆகையால் அதைப் பரிசீலனை செய்து அவ்வப்போது எடுக்கின்ற முடிவைப் பகிரங்கப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** அவ்வப்போது ஒவ்வொரு பகுதியிலும் வெவ்வேறு நிலைமைகள் ஏற்படுகின்றன. குறிப்பிட்ட கிராமத்தில் ஒரே மாதிரியாக மிகுந்த விளைச்சல் இருந்தால் நோட்டீஸ் கொடுப்பதற்குச் சங்கடம் இருக்காது. ஒரே நேரத்தில் பல கிராமங்களில் நிலைமைகள் வேறுபடுகின்றன. பாசனக் குறைவு உள்ள இடங்கள் இருக்கின்றன. பாசன வசதியுள்ள இடங்களும் இருக்கின்றன. இரண்டுக்கும் ஒரே மாதிரியாக இருக்க வேண்டுமென்று சொல்ல முடியாது. ஆகவே நோட்டீஸ் கொடுப்பது உதவியாக இருக்காது என்று நினைக்கிறேன்.

### *Gandhi Centenary Programme.*

* 336. Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the details of the Gandhi Centenary Programme of the State Government; and

(*b*) the progress so far made for its implementation?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** காந்தி நூற்றாண்டு விழாவைச் சிறப்பாகக் கொண்டாட தமிழக அரசு ஒரு மாநிலக் குழுவை அமைத்திருக்கிறது. அக்குழு செயல்படுத்திய திட்டங்கள், செயல்படுத்தஇருக்கும் திட்டங்கள் ஆகியவற்றின் விவரப்பட்டியல் * மன்றத்தின் முன்வைக்கப்பட்டுள்ளது.

**திரு. வி. ஈஸ்வரமூர்த்தி :** தலைவர் அவர்களே, இங்கே கொடுக்கப்பட்ட அறிக்கையில் திட்ட எண் 6 என்பதன் கீழ் மதுவிலக்கை அமுல் படுத்துவதைப் பற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் சமீபத்திய நிலையில் அதை மறு பரிசீலனை செய்வது போல அரசாங்கத்தின் கூற்றுகளிலிருந்து தெரிகிறது. ஆகையால் இது பற்றி அரசாங்கத்தின் தெளிவான கொள்கை என்ன ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** மறு பரிசீலனை செய்வதாகச் சொல்லவில்லை. மத்திய அரசு மாநில அரசினுடைய இந்த சேவையைப் பாராட்டி மானியம் தரவேண்டு மென்றுதான் குறிப்பிட்டோம்.

**திரு. என். சுந்தரேசத் தேவர் :** காந்தியடிகள் நூற்றாண்டு விழாவில் கல்வி, சுகாதாரம், போன்ற காரியங்களுக்கு இந்த அரசு பஞ்சாயத்து, பஞ்சாயத்து கூட்டு மன்றம் போன்றவைகளுக்கு ஓரளவு மானியம் கொடுத்து, அதைப்போன்ற சம பங்கு கிராமங்களிலிருந்து பெற்று, இப்படிப்பட்ட வேலைகளைச் செய்ய உத்தரவிடுமா ?

---

* Printed as Appendix III on pages 269–273